# உதகமண்டலம் நகராட்சி

# நிர்வாக அறிக்கை 2017–2018

## உதகமண்டலம் நகராட்சியின்

## 2017–2018–ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை

### 1. அடிப்படை அமைப்பும் நிர்வாகமும்.

அரசு ஆணை எண்–990 பொதுத்துறை நாள்03–10–1866–ன் படி உதகமண்டலம் நகராட்சி தோற்றுவிக்கப்பட்டது. இந்நகரம் கடல் மட்டத்திலிருந்து 3248.8 மீட்டர்கள் (7378 அடி) உயரத்தில் உள்ளது.

### 2. எல்லை.

இந்நகராட்சியின் மொத்த பரப்பு 30.67 சதுர கிலோ மீட்டர்கள் ஆகும். இதில் உதகமண்டலம் வருவாய் கிராமம் மட்டுமே சார்ந்துள்ளது.

### 3. மக்கள் தொகை.

2011–ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி இந்நகரின் மக்கள் தொகை 88422 ஆகும். இதில் 43,094 ஆண்கள் 45,327 பெண்கள் மற்றும் பிறர் 1. மக்கள் தொகையில் படித்த ஆண்களின் எண்ணிக்கை 37,515 மற்றும் பெண்களின் எண்ணிக்கை 36,228 ஆகவும் உள்ளது. இதில் படித்தவர்களின் சதவீகிதம் 79.5 ஆகும். இந்நகருக்கு கோடைக்காலங்களில் தினசரி சராசரியாக 25,000 முதல் 1,00,000 வரையிலும் இதர நாட்களில் 10,000 முதல் 50,000 வரையிலும் உல்லாசப் பயணிகள் வந்து செல்கின்றனர். மேலும் சுற்றுப்புற கிராமங்களிலிருந்தும் இந்நகருக்கு தினசரி மக்கள் வந்து செல்கின்றனர்.

### 4. நகராட்சியின் நிலை.

இந்நகராட்சி அரசு ஆணை எண்– 719 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, நாள்– 20–07–1987–ன் படி சிறப்பு நிலையாக உயர்த்தப்பட்டுள்ளது.

### 5. ஆணையாளர்.

அறிக்கையாண்டில் டாக்டர்.வி.பிரபாகரன், நகர் நல அலுவலர் அவர்கள் நகராட்சி ஆணையாளர் பொறுப்பில் 01–04–2017 முதல் 05–07–2017 வரையும், திரு.சி.ரவி, நகராட்சி

பொறியாளர் அவர்கள் ஆணையாளர் பொறுப்பில் 06–07–2017 முதல் 31–03–2018 வரையும் பணியாற்றினார்கள்.

## 6. ஆணையாளரின் நேர்முக உதவியாளர்.

அறிக்கையாண்டில் 01–04–2017 முதல் 28–01–2018 வரை ஆணையாளரின் நேர்முக உதவியாளர் பணியிடம் காலியாக உள்ளது. 29–01–2018 முதல் 31–03–2018 வரை திரு.A.ஜஹாங்கீர்பாஷா, அவர்கள் ஆணையரின் நேர்முக உதவியாளராக பணியாற்றினார்.

## 7. மேலாளர்.

அறிக்கையாண் திரு. கே.சௌந்தரம் அவர்கள் மேலாளராக 01–04–2017 முதல் 03–05–2017 வரையும் திரு.வி.பாஸ்கரன், வருவாய் அலுவலர் அவர்கள் மேலாளர் பொறுப்பில் 04–05–2017 முதல் 13–07–2017 முற்பகல் வரையும் திரு.எஸ்.கண்ணன், அவர்கள் மேலாளராக 13–07–2017 பிற்பகல் முதல் 31–03–2018 வரையும் பணியாற்றினார்கள்.

## 8. கணக்கர்.

அறிக்கையாண்டில் திரு.என்.ஜேசுதாஸ், உதவியாளர் அவர்கள் கணக்கர் பொறுப்பில் 01–04–2017 முதல் 10–08–2017 வரையும் திரு.கே.பால்ராஸ் அவர்கள் கணக்கராக 11–08–2017 முதல் 31–03–2018 வரையும் பணியாற்றினார்கள்.

## 9. தனி அலுவலர் தலைமையிலான கூட்டங்கள்.

01.04.2017 முதல் 31.03.2018 வரை தனி அலுவலர் தலைமையில் 9 சாதாரணக் கூட்டங்களும், 5 அவசரக் கூட்டங்களும் நடத்தப்பட்டன. சிறப்புக் கூட்டம் எதுவும் நடைபெறவில்லை.

அரசாணை எண் 146, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 24–10–2016 ன் படி நகராட்சி நிர்வாகத்திற்கு தனி அலுவலர் நியமனம் செய்து உத்திரவிடப்பட்டது. அதன்படி 01–04–2017 முதல் 05–07–2017 வரை டாக்டர்.வி.பிரபாகரன், நகர் நல அலுவலர் மற்றும் ஆணையர்(பொ) அவர்களும் 06–07–2017 முதல் 31–03–2018 வரை திரு.சி.ரவி, நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர்(பொ) அவர்களும் தனி அலுவலராக பொறுப்பேற்று 9 சாதாரணக் கூட்டங்களும், 5 அவசரக் கூட்டங்களும் நடத்தப்பட்டன. சிறப்புக் கூட்டம் எதுவும் நடைபெறவில்லை.

இவற்றில் மொத்தம் 637 பொருட்கள் மன்றத்திற்கு வைக்கப்பட்டு அனைத்து பொருட்களும் முடிவெடுக்கப்பட்டன. மேலும் நியமனக் குழு கூட்டம் ஒப்பந்தக்குழு கூட்டங்களில் முடிவெடுக்கப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை கீழ்கண்டவாறு

| கூட்டம் | நடத்தப்பெற்றவை | முடிவு எடுக்கப்பட்டவை |
|---|---|---|
| 1. நியமனக்குழு கூட்டம் | இல்லை | இல்லை |
| 2.ஒப்பந்தக் குழுக் கூட்டம் | இல்லை | இல்லை |

## 10. மேலாளுகை.

அறிக்கையாண்டில் பொது மற்றும் வருவாய் தலைப்பின் கீழ் மொத்தம் செலவுத் தொகை ரூ.36,72,52,743/– ஆகும். இது கடந்த ஆண்டு ரூ.29,44,51,788/– ஆக இருந்தது. நகராட்சி பணியாளர்களுக்கு அகவிலைப்படியும் அவ்வப்போது அரசு அளிக்கும் விகிதத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

## 11. வழக்குகள், மற்றும் நகராட்சி வழக்கறிஞர்.

வரி மற்றும் வரிசாரா இனங்கள் மற்றும் அனைத்து பிரிவுகளில் இவற்றில் முந்தைய ஆண்டுகளில் தொடரப்பட்ட வழக்குகளும் சேர்த்து மொத்த நிலுவை 102 ஆகும்.

திருமதி.கீதா.பி,ஏ,பி.எல்., அறிக்கையாண்டில் நகராட்சி சட்ட ஆலோசகராக பணிபுரிந்துள்ளார்.

## 12. புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம்.

5 முதல் 9 வயது வரையிலுள்ள மாணவர்கள் 5 மையங்களிலும் 10 முதல் 15 வயது வரையிலுள்ள மாணவர்கள் 2 நடுநிலைப்பள்ளி மையங்களிலும், மற்றும் ஒரு உயர்நிலைப் பள்ளி மையத்திலும் மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது.

நகராட்சியின் கீழ் 8 மையங்களில் இச்சத்துணவு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து சத்துணவு மையங்களுக்கும் குழாய்கள் மூலமாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் அனைத்து மைய கட்டிடங்களும் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

### பதவி இடங்களின் விவரம்

| பதவி பெயர் | மொத்த இடங்கள் | நிரப்பப்பட்டுள்ள இடம் | காலியாக உள்ள இடம் |
|---|---|---|---|
| அமைப்பாளர்கள் | 8 | 4 | 4 |
| சமையலர் | 8 | 7 | 1 |
| சமையல் உதவியாளர் | 8 | 1 | 7 |

அரசு அனுமதிக்கும் புதிய விகிதங்கள் அவ்வப்போது வழங்கப்பட்டு வருகிறது

| | |
|---|---|
| 2016–2017 ல் இறுதி இருப்பு | ரூ. 45,070/– |
| 2017–2018ல் மான்ய வரவு | ரூ. 2,62,803/– |
| மொத்தம் | ரூ. 3,07,873/– |
| 2017–2018ல் –வருடத்திய செலவு | ரூ. 2,36,570/– |
| 2017–2018ல்–ம் இறுதி இருப்பு | ரூ. 71,303/– |

5–முதல் 10 வயது வரையுள்ள குழந்தைகள் 109 பேர் மதிய உணவு உட் கொள்கின்றனர்.

மேலும் 11 வயது முதல் 16 வயது வரையுள்ள குழந்தைகள் தினசரி 109 பேர் மதிய உணவு உட்கொள்கின்றனர். இதில் 80 சதவீதம் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்.

பண்டிகை நாட்களில் முதல் நாள் குழந்தைகளுக்கு இனிப்பு பொங்கல் சாதம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் முக்கிய தலைவர்களது (பெருந்தலைவர் காமராஜர்,

பேறறிஞர் அண்ணா, மற்றும் புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர்.) பிறந்த நாட்களில் அரசு ஆணை எண் 114 சமுக நலம் மற்றும் சத்துணவு துறை நாள் 30–06–2003–ற் கிணங்க இனிப்பு மற்றும் பொங்கல் வழங்கப்பட்டு வருகிறது. தினசரி வழங்கப்படும் மதிய உணவின் விகிதாச்சாரம் கீழ்கண்டவாறு.

| உணவுப் பொருட்கள் | 1–ம் வகுப்பு முதல் 5–ம் வகுப்பு வரை | 6–ம் வகுப்பு முதல் 10–ம் வகுப்பு வரை |
|---|---|---|
| 1. அரிசி | 100–கிராம் | 150 –கிராம் |
| 2. பருப்பு | 15–கிராம் | 15– கிராம் |
| 3. எண்ணெய் | 3–கிராம் | 03–கிராம் |
| 4. சத்து உப்பு | 1.9 கிராம் | 1.9 –கிராம் |
| 5.கொ.கடலை | 20–கிராம் | 20– கிராம் |
| 6.முட்டை | அனைத்து நாட்களிலும் | அனைத்து நாட்களிலும் |
| | | |

மையங்களுக்கு தேவையான உணவு பொருட்களுக்குரிய, தேவைப்பட்டியல் ஒவ்வொரு மாதமும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு குறித்த நாளில் அனுப்பப்படுகிறது. நுகர் பொருள் வாரியமும் ஒவ்வொரு மாதமும் 14–ந் தேதியிலிருந்து 19–ம் தேதிக்குள் சத்துணவு மையங்களுக்கு பொருட்கள் விநியோகம் செய்கிறது.

பள்ளி மையங்களில் உணவு உட்கொள்ளும் குழந்தைகள் நிர்ணயம் செய்துள்ள விவரம் கீழ்க்கண்டவாறு

| மைய எண் / மற்றும் பெயர் | உணவு உட்கொள்ளும் குழந்தைகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1. தலையாட்டி மந்து | 68 |
| 2. இராமகிருஷ்ணாபுரம் | 33 |
| 3. மெயின்பஜார்–1 | 8 |
| 4. பசுவையா நகர் | 37 |
| 5. கோடப்பமந்து ஆரம்ப பள்ளி | 8 |
| 6. பழைய உதகை | 11 |
| 7. கோடப்பமந்து உயர்நிலைப்பள்ளி | 8 |
| 8.காந்தி நகர் 11– உருதுப் பள்ளி | 45 |
| 9.வண்ணாரப்பேட்டை ஆரம்ப பள்ளி | (பள்ளி செயல்படுவதில்லை) |
| மொத்தம் | 218 |

எல்லா பள்ளி சத்துணவு மையங்களையும் ஆணையாளர் மற்றும் பிரிவு தலைவர்கள் அவ்வப்போது பார்வையிடுகின்றனர். இது தொடர்பாக அறிக்கை ஒவ்வொரு மாதமும் மாவட்டஆட்சித் தலைவர், உதகமண்டலம் அவர்களுக்கு அனுப்பப்படுகிறது.

## 13. கல்வி நிலையங்கள்.

இந்நகராட்சி எல்லைக்குள் நகராட்சியின் பராமரிப்பில் இயங்கி வந்த 10 ஆரம்ப பள்ளிகளும், மற்றும் இரண்டு இடைநிலை பள்ளிகளும் கல்வி இலாக்காவிடம் 01–04–1990 முதல் ஒப்படைப்பு செய்யப்பட்டு அவர்களின் நேரடி பார்வையில் இயங்கி வருகிறது. கட்டிடங்கள் பராமரிப்பை நகராட்சி செய்து வருகிறது. தவிர கீழ்கண்ட விவரப்படி

தனியாருக்கு சொந்தமான அரசு நிதி உதவி பெறும் பல ஆரம்ப பள்ளிகளும் இடைநிலைப் பள்ளிகளும் இந்நகராட்சி எல்லைக்குள் அமையப் பெற்றுள்ளது.

**உயர்நிலைப்பள்ளிகள்**

1. நகராட்சி உயர்நிலைப் பள்ளி கோடப்பமந்து
2. செயின்ட் திரேசாஸ் உயர்நிலைப்பள்ளி
3. புனித சேக்ரட் ஹார்ட் பெண்கள் உயர்நிலைப்பள்ளி
4. குட்செப்பர்டு உயர்நிலைப்பள்ளி
5. ரெக்ஸ் உயர்நிலைப்பள்ளி
6. சி.எம்.எம். உயர்நிலைப்பள்ளி

**மேல்நிலைப்பள்ளிகள்.**

1. அரசினர் மேல்நிலைப்பள்ளி
2. பெத்லேகம் மேல்நிலைப்பள்ளி
3. செயின்ட் ஜோசப் மேல்நிலைப்பள்ளி
4. சி.எஸ்.ஐ. ஜெல் மெமோரியல் மேல்நிலைப்பள்ளி
5. பிரிக்ஸ் மெமோரியல் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப்பள்ளி
6. சாந்தி விஜயா பெண்கள் மேல்நிலைப்பள்ளி

## 14. சிறப்பு பள்ளிகளும் பொது நூலகங்களும்.

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் மாவட்ட நூலகம் ஒன்று நூலகத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. தனியார் துறையினரால் நீலகிரி லைப்ரரி ஒன்று செயல்பட்டு வருகிறது.

## 15. விளையாட்டு மைதானம்.

நகரின் காந்தல் பகுதியில் இந்நகராட்சிக்கு சொந்தமான விளையாட்டு மைதானம் இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 16. வருவாய்

அறிக்கையாண்டில் திரு.வீ.பாஸ்கரன் அவர்கள் வருவாய் அலுவலராக 01–04–2017 முதல் 31–03–2018 பணிபுரிந்துள்ளார்.

### நகராட்சியின் வருவாய் இனம்

நகராட்சி சந்தை கடைகள், ஆடு, மாடு வதைச்சாலை மற்றும் கட்டணக் கழிப்பிடங்கள் ஆகிய தலைப்பின் கீழ் பெறப்பட்ட மூன்று வருட வருமானம் கீழ்க்கண்டவாறு:–

| வருடம் | சந்தை (ரூபாயில்) | வதைச்சாலை (ரூபாயில்) | கட்டண கழிப்பிடங்கள் |
|---|---|---|---|
| 2015–2016 | 14,00,000/– | 2,62,000/– | 7,98,000/– |
| 2016–2017 | 14,70,000/– | 2,73,948/– | 11,93,564/– |
| 2017–2018 | 15,43,500/– | 2,81,750/– | 16,74,645/– |

நகராட்சி சந்தையில் மொத்தம் 1327 கடைகள் உள்ளன. சந்தைக்கு வெளிபுறம் பல்வேறு இடங்களில் ( சேரிங்கிராஸ், எட்டின்ஸ் சாலை, காந்தல், ஃபிங்கர் போஸ்ட்) மொத்தம் 301 கடைகள் உள்ளன. இக்கடைகளிலிருந்து 2017–2018 – ம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட வாடகை ரூ.75,94,872/– ஆகும். வசூலிக்கக்கூடிய கேட்பில் 2017–2018 ம் ஆண்டில் 7.74% வசூலிக்கப்பட்டுள்ளது.

## 17. பேருந்து நிறுத்துமிடம்

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையம் ஏதும் இல்லை.

## 18. வதைச்சாலை.

இந்நகராட்சியில் ஆடு, மாடுகள் வதைச்சாலை ஒன்றும் பன்றிகள் வதைச்சாலை ஒன்றுமாக இரண்டு வதைச்சாலைகள் பராமரிப்பில் உள்ளது. நடப்பு ஆண்டில் வதைக் கட்டணம் மூலம் வருமானம் ரூ.2,81,750/– ஆகும். இது சென்ற ஆண்டு ரூ. 2,73,948/– ஆக இருந்தது.

| | |
|---|---|
| 1. ஆடு அடிப்பதற்கு கட்டணம் ஒன்றுக்கு | ரூ. 10.00 |
| 2. மாடு அடிப்பதற்கு கட்டணம் ஒன்றுக்கு | ரூ. 25.00 |
| 3. பன்றி அடிப்பதற்கு கட்டணம் ஒன்றுக்கு | ரூ 5.00 |

## 19. நகராட்சி குடியிருப்புகள்.

நகராட்சியின் பல்வேறு பகுதிகளில் 415 நகராட்சி குடியிருப்பு மனைகள் உள்ளன. இதில் சுல்தான் பேட்டையில் உள்ள குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு என கட்டப்பட்டுள்ள 40 குடியிருப்புகளும் சேர்ந்ததாகும். 415 குடியிருப்பு மனைகளில் 142 குடியிருப்பு மனைகளில் நகராட்சி பணியாளர்களும் 31 குடியிருப்புகளில் ஓய்வு பெற்ற பணியாளர்களும் 242 குடியிருப்புகளில் தனியார் குடியிருக்கின்றனர்.

2017–2018 அறிக்கையாண்டில் வீட்டு வாடகை மூலமாக கிடைத்த வருமானம் ரூ.18,05,687/– ஆகும். சென்ற ஆண்டின் வருமானம் ரூ.14,85,363/– ஆக இருந்தது.

## 20. டோபிகானா.

டோபிகானவிலிருந்து அறிக்கையாண்டில் வருமானம் ஏதும் பெறப்படவில்லை.

## 21. தங்கும் விடுதி.

அறிக்கை ஆண்டில் தங்கும் விடுதி நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 22. நவீன கட்டண கழிப்பிடங்கள்.

இந் நகராட்சியில் 8 நவீன கட்டண கழிப்பிடங்கள் , 3 சிறு நீர் கழிப்பிடங்கள் கீழ்கண்ட இடங்களில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

1. அரசினர் பூங்கா அருகில் (நம்ம டாய்லெட்)
2. கமர்சியல் சாலை ஒய்.எம்.சி.ஏ அருகில்
3. லோயர் பஜார் தேங்காய் கடை நுழைவாயில் முன்புறத்தில்
4. அப்பர் பஜார் தபால் நிலையம் எதிரில்
5. சேரிங்கிராஸ் கூட்டுறவு அச்சகம் எதிரில்
6. ஹோபர்ட் பார்க் சாலை காந்தி மைதானம் அருகில்
7. மத்திய பேருந்து நிலையம் அருகில் (நம்ம டாய்லெட்)

8. தாவிரவியல் பூங்கா அருகில் உள்ள சிறு நீர் கழிப்பிடம்

9. ஏ.டி.சி. அருகில் உள்ள சிறு நீர் கழிப்பிடம்

10. மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள சிறு நீர் கழிப்பிடம்

11. நகராட்சி சந்தையில் புதிதாக கட்டப்பட்ட கழிப்பிடம்

இந்த கட்டண கழிப்பிடங்களில் அறிக்கை ஆண்டில் பெறப்பட்ட வசூல் தொகை ரூ.12,62,272/– இது சென்ற ஆண்டு ரூ.8,09,896/– ஆக இருந்தது.

## 23. சொத்து வரி.

நகர மன்ற தீர்மான எண் 4131 நாள் 27–02–2008ன் படி, 01–04–2008 முதல் சொத்துவரி பொது சீராய்வு செய்யப்பட்டது.

2016–2017 –ம் அறிக்கை ஆண்டில் சொத்து வரி விதிக்கப்பட்ட கட்டிடங்கள் மற்றும் சொத்துவரி விதிப்பு எண்ணிக்கை 1139 ஆகும்.

1. மண்டலம் A –ரூ. 1.80

2. மண்டலம் B –ரூ. 1.50

3. மண்டலம் C –ரூ. 1.20

## 24. வருவாய் கணக்கு.

வருட வாடகை மதிப்பில் 15.7 சதவீதம் சொத்துவரியாக வசூலிகப்பட்டு கீழ்க்கண்ட இனங்களுக்கு பிரித்து வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. பொது வரி | 4.5– சதவீதம் வருடத்திற்கு |
| 2. குடிநீர் மற்றும் வடிகால் வரி | 7.5– சதவீதம் வருடத்திற்கு |
| 3.கல்வி வரி | 2.5– சதவீதம் வருடத்திற்கு |
| 4.நூலக வரி | 1.2 சதவீதம் வருடத்திற்கு |

## 25. காலியிட வரியினங்கள்.

அறிக்கை ஆண்டில் காலியிட மனைவரி 41 இனங்களுக்கு விதிக்கப்பட்டு உள்ளது. அரசாணை எண்.151 நாள் 20.08.2009 – ன் படி கணக்கிடப்பட்டு 1.10.2009 முதல் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்து வசூலிக்கப்பட்டுவருகிறது.

1. மண்டல ம் A ரூ.0.60
2. மண்டல ம் B ரூ.0.50
3. மண்டல ம் C ரூ.0.40

## 26. தொழில் வரி.

2014 ம் ஆண்டு முதல் கீழ்கண்டவாறு தொழில்வரி உயர்வு செய்யப்பட்டுள்ளது.

1. 20,000 வரை தொழில் வரி இல்லை
2. 20,001 முதல் 30,000 வரை ரூ. 130/–
3. 30,001 முதல் 45,000 வரை ரூ.330/–
4. 45,001 முதல் 60,000 வரை ரூ. 620/–
5. 60,001 முதல் 75,000 வரை ரூ. 940/–
6. 75,001 முதல் அதற்குமேல் ரூ. 1230/–

அதன் படி அறிக்கை ஆண்டில் ரூ.2,37,13,082/– வசூல் செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு ரூ.1,80,29,347/– ஆக உள்ளது.

## 27. வரி விதிப்பு நிலைப்பாடு.

2017–2018 –ம் ஆண்டிற்கான வசூலிக்கக் கூடிய நடப்பு கேட்பு ரூ.967.84 இலட்சம் ஆகும். இந்த கேட்பில் ரூ.919.18 இலட்சம் (94.97 சதவீதம்) வசூல் செய்யப்பட்டுள்ளது.

அரசு அலுவலக கட்டிடங்களுக்கான நடப்பு கேட்பு ரூ.173.40 ஆகும். இதில் ரூ.122.10 இலட்சம் (70.41 %) வசூலிக்கப்பட்டுள்ளது.

## 28. சிறு சேமிப்பு.

2017–2018 – ம் ஆண்டில் இந்நகராட்சிக்கு மாவட்ட ஆட்சியரால் நிர்ணயிக்கப்பட்ட குறியீடு ரூபாய். 100 லட்சம் ஆகும்.

## 29. பொறியியல் பிரிவு

அறிக்கை ஆண்டில் திரு.பொ. ரூபன் சுரேஷ் பொன்னையா அவர்கள் நகராட்சி பொறியாளராக 01–04–2017 முதல் 27–6–2017 வரையும் திரு.சி.ரவி அவர்கள் நகராட்சி பொறியாளராக 28–06–2017 முதல் 31–03–2019 வரையும் பணியாற்றினார்கள். சாலைகள் பராமரித்தல், நகராட்சி கட்டிடங்கள் பராமரித்தல், நகருக்கு குடிநீர் வழங்குதல், புதைச் சாக்கடை திட்டங்கள் பராமரித்தல், நகராட்சி நீர் நிலையங்களுக்கும், மின்சார விநியோகம் செய்தல் போன்றவைகளையும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பணியாளர்களுடன் சேர்ந்து செயல்பட்டு வருகிறது. பொறியியல் துறையில் ஒரு இளநிலை பொறியாளரும், இரண்டு உதவி பொறியாளரும், ஒரு பணி மேற்பார்வையாளரும் 4 பணி ஆய்வாளர்களும், பணியாற்றி வருகின்றனர். இவர்கள் அனைவரும் அனைத்து பொறியியல் சம்பந்தமான வேலைகளை கவனித்து வருகின்றனர். அறிக்கையாண்டில் பொறியியல் பணியமைப்பு தலைப்பில் செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 5,26,91,382/– ஆகும். இது முந்தைய ஆண்டில் ரூ. 4,48,92,000/– ஆக இருந்தது.

## 30. சாலைகள்.

உதகமண்டலம் நகராட்சி பகுதியில் உள்ள பிரதான சாலையானது 142.10 கிலோ மீட்டர் நீளத்திலும், சுமார் 30 கிலோ மீட்டர் நீளத்தில் சிமெண்ட் நடைபாதைகளும் பராமரிக்கப்பட்டுள்ளது. தவிர நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள 28.28 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலையானது நெடுஞ்சாலை துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளிலுள்ள மொத்தம் 142.10 கி.மீ. நீளமுள்ள தார் சாலைகள் இந் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் சாலை பணிகளுக்காக வசூலிக்கப்பட்ட தொகை மற்றும் செலவிடப்பட்ட தொகை ஆகியவவைகள் கீழ்க்கண்டுள்ளவையாகும்.

| | |
|---|---|
| அறிக்கையாண்டில் சாலை பராமரிப்பு பணிகளுக்கான வரவு செலவு மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட தொகை | ரூ. 2170.00 லட்சம் |
| அறிக்கையாண்டில் சாலைகள் பராமரிப்பிற்காக செலவு செய்யப்பட்ட தொகை | ரூ. 377.95 லட்சம் |
| கடந்த ஆண்டில் சாலை மூலதனம் பணிகளுக்காக செலவிடப்பட்ட தொகை | ரூ. 254.17 லட்சம் |

இந்நகரின் சீதோஷ்ண நிலையினாலும், இது மலைப்பகுதியாக உள்ள காரணத்தினாலும், பிரதான சாலைகளில் அடிக்கடி பழுதுகள் ஏற்படுகின்றது. சில சாலைகள் மட்டுமே வருடம் ஒரு முறை அல்லது இரண்டு வருடத்திற்கு ஒரு முறை பழுதுகள் அவ்வப்போது சரி பார்க்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது. பல சாலைகள் நகரின் மையப் பகுதிகளில் அமைந்துள்ளதாலும் பாரப் பேருந்துகள், பஸ்கள் உபயோகப்படுத்தப்பட்டு வருவதாலும் பழுதுகள் அடிக்கடி ஏற்படுகின்றன. மேலும் பல சாலைகள் நீர் ஊற்றுகளின் மேல் அமைந்துள்ளதால் பழுதுகள் அடிக்கடி ஏற்பட்டு வருகின்றது. இது போன்ற பழுதுகள் நகராட்சி நிதி நிலையை அனுசரித்தும் அவசியத்தின் பேரில் பழுதுகள் சரிபார்க்கப்பட்டு வந்துள்ளது.

சாலை பராமரிப்பு பணிகள், சந்தையினுள் பராமரிப்பு செய்யும் பணிகள் மற்றும் புதிய தெரு விளக்குகள் அமைக்கும் பணிகள் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் மேம்பாட்டு நிதியின் கீழும், பரவலாக்கப்பட்ட மாவட்ட திட்ட நிதியின் கீழும், நகராட்சி சொத்துகளை உருவாக்கும் திட்டத்தின் கீழும் மற்றும் நகராட்சி நிதியின் மூலமாகவும், சாலைகள் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது.

## 31. கருவிகளும் தளவாடங்களும்.

பொறியியல் பிரிவில் கீழ்கண்டவாறு வாகனங்கள் குடிநீர் விநியோகம் மற்றும் பொதுப் பணிகளுக்கான உபயோகத்தில் உள்ளது.

**1.டி.என்.என். 43 சி 1837**

**2.டி..என். 43 இ 1203**

**3.டி.என். 43 இ 1215**

**4. டி.என். 43 சி 3981**

**5.டி.என்.என். 8479–பாதாள சாக்கடை சுத்தம் செய்யும் வாகனம்.**

**6.டி.என்.என்.6380**

**7.டி.என்.என்.7231**

**8.டி.என்.என்.43–3043**

**9.டி.என்.என்.43–சி 7391 –மினி டீசல்டிங் ஆட்டோ**

**10.**TN 43 எப் 9408 Aggitator Sucking Machine

11 TN 43 எப் 4793 ஆட்டோ

12 TN 42 J 4399 Street light ladder

இவைகள் தவிர நகராட்சி ஆணையாளர், நகர மன்ற தலைவர் மற்றும் பிரிவு தலைவர்களின் உபயோகத்திற்காக கீழ்க்கண்ட வாகனங்கள் உபயோகத்தில் உள்ளது.

**1.டி.என்.43–5805(ஜீப்)**

**2.டி.என்.43 –8010 (ஜீப்)**

**3.டி.என்.43–பி 9612(ஜீப்)**

**4.டி.என்.43–பி–2018(ஜீப்)**

**5.டி.என்.43–இ–2638 (ஜீப்)**

## 32. தெரு விளக்குகள்.

அரசின் கொள்கைப் படி மின்சார வாரியத்தினாரால் பராமரிக்கப்பட்டு வந்த நகரில் உள்ள அனைத்து தெரு விளக்குகளையும், கடந்த **01–10–1980–**ம் நாள் முதல் நகராட்சி

பராமரிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. அனைத்து தெரு விளக்கு பராமரிப்பு பணிகளும் மின் கம்பியாளர்கள், மின் கம்பி உதவியாளர்களால் உடனுக்குடன் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள தெரு விளக்குகள் கீழ்கண்டவாறு பராமரிக்கப்பட்டு வருகின்றது.

| வஎண் | விளக்குகளின் விவரங்கள் | 2015–16 | 2016–17 | 2017–18 |
|---|---|---|---|---|
| 1 | சோடியம் ஆவி விளக்குகள் | 984 | 654 | 129 |
| 2 | குழல் விளக்குகள் | 629 | – | – |
| 3 | உயர்மின் கோபுர விளக்குகள் | 21 | 21 | 21 |
| 4 | சி எப் எல் | 60 | 60 | 60 |
| 5. | L.E.D விளக்கு | 2346 | 4174 | 4700 |
| | மொத்தம் | 4040 | 4909 | 4910 |

தெரு விளக்குகள் பராமரிப்பு பணிகளின் படி சொத்துவரி விதிப்பின் கீழ் வருட வாடகை மதிப்பில் 1–1/2 சதவீதம் ஆக வசூலிக்கப்பட்டு வருகின்றது. அறிக்கையாண்டில் இத்தலைப்பின் கீழ் பணியாளர்களின் ஊதியத்தையும் சேர்த்து ரூ.49,15,879/– செலவிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ரூ.46,81,790/–ஆகும்.

### 33. குடிநீர் விநியோகம்.

உதகை நகராட்சியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் 1980–ம் ஆண்டு முதல் உபயோகத்தில் இருந்து வருகிறது. குடியிருப்புகளுக்கேற்ப அவ்வப்போது திட்டம் விரிவு படுத்தப்பட்டு தற்போது பார்சன்ஸ்வேலி நீர் தேக்கம் உட்பட 10 குடிநீர் தேக்கங்களிலிருந்து நகருக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. பார்சன்ஸ் வேலி திட்ட பிரதான குழாயுடன் சேர்த்து நகரிலுள்ள பிரதான குடிநீர் குழாய்களின் நீளம் 127.46 கிலோ மீட்டர்கள் ஆகும். உதகை நகருக்கு குடிநீர் வழங்கும் 9 நீர்த் தேக்கங்களின் விவரம் பின் வருமாறு.

| குடிநீர் தேக்கங்களின் பெயர் | கொள்ளவு நீர்பிடிப்பு (மில்லியன் கேலன்) |
|---|---|
| 1. டைகர் ஹில் | 30.00 |
| 2. மேல் தொட்டபெட்டா | 04.50 |
| 3. கீழ் தொட்டபெட்டா | 00.50 |
| 4. மார்லிமந்து | 54.00 |
| 5. கீழ் கோடப்பமந்து | 00.12 |
| 6. மேல் கோடப்பமந்து | 01.00 |
| 7. பழைய உதகை | 00.10 |
| 8. கிளன்ராக் | 00.10 |
| 9.கோரி சோலா | 15.00 |

பார்சன்ஸ்வேலி பள்ளத்தாக்கிலிருந்து உதகை நகருக்கு எடுக்கப்பட்டு வரும் ஒவ்வொரு 1000 காலன் தண்ணீருக்கு அரசு ஆணை எண் 2744 பொதுப்பணித்துறை , நாள் 19–11–1996–ன் படி 0.75 பைசா வீதம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தண்ணீர் கட்டணமாக செலுத்தப்பட்டு வருகிறது. இருப்பினும் அரசு ஆணை எண் 130 நாள் 07–08–1992–ன் படி ஆதாரங்களிலிருந்து குடிநீருக்காக எடுக்கப்படும் தண்ணீருக்கு

நகராட்சிகள் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்குமாறு கோரி அரசுக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது. அரசிடமிருந்து ஆணை எதுவும் பெறப்படவில்லை.

மேலும் பார்சன்ஸ்வேலியிலிருந்து தினசரி 20.00 லட்சம் காலன் தண்ணீர் கொண்டு வரும் திட்டம் ரூ. 750.00 லட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் வேலைகள் முடிக்கப்பட்டு 19–10–2000 அன்று இவ்வலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. தினசரி உதகை நகருக்கு சுமார் 15.00 லட்சம் காலன் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

அறிக்கையாண்டில் 358 புதிய வீட்டு இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளது. ஆண்டு இறுதியில் வீட்டு குழாய் இணைப்புகளின் எண்ணிக்கை 12435 ஆகும். பொது குடிநீர்க் குழாய் எதுவும் நிறுவப்படவில்லை.

வீட்டு குடிநீர்க் குழாய் இணைப்புகள் யாவும் நகரமன்றத் தீர்மானம் எண் 1262, நாள் 27–03–1979–ன் படியும் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம், உதகை கண்காணிப்பு பொறியாளரின் 20–02–1975–ம் தேதிய 17757/75 டி3 கடிதம் படியும் பரிசீலிக்கப்பட்டு நகராட்சி ஆணை சட்டத்தின் படியும் குடிநீர் இணைப்புகள் கொடுக்கப்பட்டு வருகிறது.

### வீட்டு வசதிக்கான இணைப்பு–

1000–லிட்டருக்கு ரூ. 12–வீதம் குறைந்த பட்சம் மாதம் ரூ. 120/–

இதர இனங்களுக்கான இணைப்பு–

| | |
|---|---|
| 1. தொழில் இனங்களுக்கான இணைப்பு | 1000– லிட்டருக்கு ரூ. 60.00 வீதம் குறைந்த பட்சம் மாதம் ரூ. 600.00 |
| 2. வணிக இனங்களுக்கான இணைப்பு | 1000 லிட்டருக்கு ரூ. 60.00 வீதம் குறைந்த பட்சம் மாதம் ரூ. 600.00 |

இக்கட்டண உயர்வுகள் இந்நகர மன்றத் தீர்மானம் எண் 409 நாள் 30–05–2016–ன் படி அங்கீகாரம் பெறப்பட்டு மாவட்ட அரசிதழ் ஜூலை 2016 மாத வெளியீட்டில் பிரசுரிக்கப்பட்டு உள்ளது. இந்த கட்டண விகிதங்கள் 01–04–2016 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது.

மேலும் புதிய வீட்டு குடிநீர் இணைப்புகளுக்கு ரூ. 5000/– மற்றும் வீட்டு உபயோகம் இல்லாமல் வழங்கப்படும் தொழில் வசதி மற்றும் வணிக வசதிக்காக ரூ. 15,000–ம் வைப்புத் தொகையாக வசூலிக்கப்பட்டு வருகின்றன.

அறிக்கையாண்டில் பருவமழை திருப்திகரமான அளவு இருந்தது. எனவே குடிநீர் தட்டுபாடு இன்றி சீராக பராமரிக்கப்பட்டு வந்தது. மேடுப்பாங்கான இடங்களுக்கு நகராட்சி லாரிகள் மூலமாகவும், குடிசை பகுதிகளுக்கு தொட்டிகள் அமைத்து லாரிகள் மூலம் தண்ணீர் நிரப்பி பொது மக்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வந்தது.

தலைமை நீரேற்று நிலையமான பார்சன்ஸ்வேலி நீரேற்று நிலையத்தில் 170 குதிரை திறன் கொண்ட 4 மோட்டார்களும் 60 குதிரை திறன் கொண்ட மோட்டார்–1 மற்றும் 250– எச்.பி. இரண்டும் 500 KVA ஜெனரேட்டரும் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

அறிக்கையாண்டில் குடிநீர் விநியோக பணியமைப்பின் கீழ் ரூ.6,40,04,358/– செலவு செய்யப்பட்டது. இது கடந்த ஆண்டு ரூ.6,09,56,532/– ஆகும்.

**34. பாதாள சாக்கடை திட்டம்.**

நகரின் பெரும்பாலான பகுதிகளுக்கு புதிய பாதாள சாக்கடைத் திட்டம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. பாதாளச் சாக்கடைத் திட்ட பகுதியில் விஸ்தீரணம் சுமார். 12.95 சதுர கி.மீ. ஆகும்.

இந்நகராட்சிக்குட்பட்ட படகு இல்லம் ஏரியில் அசுத்த நீர் கலக்காமல் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை கருத்தில் கொண்டு புதிய பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, இத்திட்ட பணிகளுக்காக ரூ. 1072/– இலட்சம் செலவு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து இந்நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. புதிய பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் அறிக்கையாண்டு முடிய 15803 குடியிருப்பு இணைப்புகள் வழங்கப்பட்டுளளது. இது சென்ற ஆண்டு வரை 15715 குடியிருப்பு இணைப்புகளாக இருந்தது.

**35. மரம் நடுதலும் பூங்காக்களும்.**

அறிக்கையாண்டில் நடப்பட்ட மரங்களும் தற்போதுள்ள மரங்களின் விவரமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | ஆண்டு தொடக்கத்தில் இருந்த மரங்களின் எண்ணிக்கை | 97221 – எண்கள் |
| 2. | அறிக்கையாண்டில் நடப்பட்டவை | – |
| 3. | பொது ஏலத்தில் விடப்பட்டவை | – |
| 4. | மழையினால் வெட்டப்பட்ட மரங்களின் எண்ணிக்கை | 6 |
| 5. | அறிக்கையாண்டில் இறுதியில் உள்ள மரங்களின் எண்ணிக்கை | 97215 |

**36. பூங்காக்கள்.**

அறிக்கையாண்டில் இந்நகராட்சிக்குட்பட்ட 20 இடங்களில் அமைந்துள்ள பூங்காக்களில் கீழ்கண்ட 10 இடங்களில் பூங்காக்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. அவற்றில் 7– பூங்காக்கள் தனியார் நிறுவனங்களுக்கு பராமரிப்புக்கு விடப்பட்டுள்ளது.

| வ. எண் | பூங்காக்களின் விவரம் | விஸ்தீரணம் (ஏக்கர்) | பராமரிப்பு |
|---|---|---|---|
| 1. | கிளப் சாலை ஹில்பங்க் அருகில் உள்ள பூங்கா | 0.10 | ஹோட்டல் ஜெய்சாந்தி |
| 2. | கிளப் சாலையிலிருந்து பழைய டி.ஆர். டேவில் கட்டித்திற்கு அருகில் உள்ள பூங்கா | 0.15 | ஹோட்டல் ஜெய்சாந்தி |
| 3. | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் உள்ள பூங்கா | 0.15 | கிளப் மகேந்திரா |
| 4 | பாரதியார் பஸ் நிலையம் அருகில் உள்ள பூங்கா | 0.20 | ஹாலிடே இன் ஜெம்பார்க் ஹோட்டல் |
| 5 | உதகமண்டலம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள பூங்கா | 0.10 | நகராட்சி |
| 6 | பாறை முனீஸ்வரர் கோவிலை சுற்றி அமைந்துள்ள இரண்டு பூங்காக்கள் | 0.10 | நகராட்சி |
| 7 | சேரிங்கிராஸ் தந்தை பெரியார் நினைவு தூண் சுற்றியுள்ள பூங்கா | 0.02 | ஹோட்டல் சதர்ன்ஸ்டார் |
| 8 | சேரிங்கிராஸ் ஆதாம் நீரூற்று பூங்கா | 0.05 | மெரிட் இன் |

| | | | |
|---|---|---|---|
| 9 | மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகம் சந்திப்பு அருகில் உள்ள நீருற்று பூங்கா | 0.20 | ஹோட்டல் நஹார் |
| 10 | ஸ்டேட் வங்கி முன்புறமுள்ள பூங்கா | 0.05 | பாரத வங்கி |

உதகமண்டலம் நகர மன்றத்தின் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளிலுள்ள பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், மற்றும் திறந்த வெளி இடங்களின் விவரங்கள்.

| வ.எண் | விவரங்கள் | எண்ணிக்கை | பரப்பளவு |
|---|---|---|---|
| 1 | பூங்காக்கள் | 19 | 250100.26ச.மீ. |
| 2 | விளையாட்டு மைதானங்கள் | 21 | 76130.97 ச.மீ. |
| 3 | திறந்தவெளி இடங்கள் | 21 | 265544.51 ச. மீ. |

## 37. 2017–2018ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விபரம்

பொது நிதியின் கீழ் 2017–2018ல் ரூ.387.00 இலட்சம் மதிப்பில் 48 பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் ரூ.223.46 இலட்சம் மதிப்பில் 36 பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

கல்வி நிதியின் கீழ் ரூ.86.00 இலட்சம் மதிப்பில் 8 பணி மேற்கொள்ளப்பட்டது.

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.60.00 இலட்சம் மதிப்பில் 3 பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

சட்ட மன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ11.00 இலட்சம் மதிப்பில் 3 பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

பாராளுமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் ரூ.15.00 இலட்சம் மதிப்பில் 1 பணி மேற்கொள்ளப்பட்டது.

TURIP திட்டத்தின் கீழ் 400.00 இலட்சம் மதிப்பில் 24 பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

## 38. பொது சுகாதாரம்

அறிக்கையாண்டில் டாக்டர்.வீ.பரபாகரன் அவர்கள் நகர்நல அலுவலராக 01.04.2017 முதல் 02.08.2017 வரையும் டாக்டர்.பி.ஆர்.முரளி சங்கர் அவர்கள் நகர்நல அலுவலராக 03–08–2017 முதல் 31–03–2018 வரையும் பணியாற்றினார்.

இந்நகராட்சியில் 188 துப்புரவு பணியாளர்கள் நிரந்தரமாக பணி புரிந்து வருகிறார்கள். துப்பரவு ஆய்வாளர்கள் 5 நபர்களும், துப்பரவு பணி மேற்பார்வையாளர்கள் 13 நபர்களும் பணி புரிந்தார்கள். மார்கெட் வெளிபுற சுற்றுப்பகுதிகள் தனியார் மயமாக்கப்பட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பொது சுகாதார பணிக‘ள் நடைபெற்று வருகிறது.

தினம்தோறும் 3 நகராட்சி லாரிகள் மற்றும் 5 டம்பர் பிளேசர் மூலமாக திடக்கழிவுகள் அன்றாடம் எடுக்கப்பட்டு உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகிறது. உரக்கிடங்கு உள்ள இடம் அரசு வனப்பகுதியாக உள்ளதால் உரம் தயாரிக்க இயலாத நிலையில் குப்பைகள் கொட்டும் இடமாக இருந்து வருகிறது.

நகராட்சி எல்லைக்குள் 99+3=102 கழிப்பிடங்கள் உள்ளன. நகரின் அனைத்து பகுதிகளிலும் டம்பர் பிளேசர் பின் மற்றும் குப்பைத் தொட்டிகள் பரவலாக வைக்கப்பட்டு

அன்றாடம் 38 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டு கொட்டப்பட்டு வருகிறது.

நகரின் மையப்பகுதிகளில் வீடு வீடாக குப்பைகள் வாங்கி பிரித்தெடுக்கப்பட்டு தள்ளு வண்டிகள் மூலம் குப்பைத் தொட்டிகளில் சேகரிக்கப்படுகிறது. 24 ஆட்டோக்கள் மூலம் உரகிடங்கிற்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

கோழிக்கழிவுகள் மற்றும் மாமிசக் கழிவுகள் தனியாக டம்பர் பிளேசர் பின்கள் மூலம் கலவை உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டு குழிகளில் புதைக்கப்படுகிறது.

ஒவ்வொரு வாரமும் திங்கள், புதன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் கூட்டு துப்புரவு பணியாக கோடப்பமந்து திறந்த வெளிக்கால்வாய் மற்றும் தெருக்களில் உள்ள கால்வாய்கள் சுத்தம் செய்யப்பட்டு கிருமி நாசினிகள் பயன்படுத்தப்பட்டு பொது சுகாதாரம் பேணப்பட்டு வருகிறது.

தொற்று நோய்கள் பாதிப்பு இக்காலத்தில் எதுவும் இல்லை. குடிநீரில் அன்றாடம் குளோரின் கலவை ஆய்வு செய்யப்பட்டு பொது நலன் பேணப்பட்டு வருகிறது.

ஆடு, மாடு மற்றும் பன்றி வதை செய்யும் இடம் நகராட்சியால் தனித்தனியாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் நிகழும் பிறப்பு இறப்பு மற்றும் இறந்து பிறந்தவைகளை உடனுக்குடன் பதிவு செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது.

இத்தலைப்பின் கீழ் அறிக்கையாண்டில் ரூ.3,86,321/– செலவிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டின் செலவீனம் ரூ.2,33,502/– ஆகும்.

இந்நகரின் எல்லைக்குள் எல்லா இடங்களிலும் குப்பைத் தொட்டிகள் பரவலாக வைத்து குப்பைகள் சேகரிக்கப்படுகின்றன. பொது சுகாதார பிரிவில் துப்புரவு பணியாளர்கள் பற்றாகுறையினால் தனியார் மூலம் ஆள் சப்ளை செய்து வரும் 27 பணியாளர்கள் மற்றும் நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்ணயம் செய்த ஊதியத்தில் 100 துப்புரவு பணியாளர்கள் 89 நாட்களுக்கு தற்காலிகமாக பணியாற்றி வருகிறார்கள். பொது சுகாதார பணிக்காக பொது நிதியிலிருந்து ரூ.22,68,43,200/– அறிக்கை ஆண்டில் செலவிடப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் அமைந்துள்ள மொத்த குடியிருப்பு மனைகளில் கழிப்பிட வசதியில்லா மனைகளிலும் புதியதாக கட்டிடம் கட்டும் இடங்களிலும் தூய்மை பாரத திட்டத்தின் கீழ் 2253 கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு பொது மக்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறார்கள்.

துப்புரவு வாகனங்கள் பராமரிப்பு செலவினத்திற்கு ரூ.70,25,000/– செலவிடப்பட்டுள்ளது. இந்நகராட்சி பகுதிகளில் சேகரமாகும் குப்பை கூளங்கள் , 8 லாரிகள் மூலம் தினந்தோறும் அகற்றப்பட்டு வருகிறது. இவைகளை நகருக்கு வெளியே தீட்டுக்கல் என்னும் இடத்தின் அருகே உள்ள உரக்கிடங்கில் சேகரிக்கப்படுகிறது. இது சுமார் 15 ஏக்கர் பரப்பளவு உள்ளது. இதனை வனத்துறையினரிடமிருந்து நகராட்சிக்கு குத்தகைக்கு அனுமதித்து இதற்கு ஈட்டு நிலமாக 30 ஏக்கர் நிலம் மார்லிமந்து ஏரியில் உள்ள மரங்களடர்ந்த நிலத்தினையும், இந்த நிலத்திற்கான தொகை ரூ.33,38,500/– வனத்துறையினருக்கு செலுத்தப்பட்டும், குத்தகை உத்திரவு எதிர் பார்க்கப்படுகிறது. திடகழிவு மேலாண்மை திட்ட செயலாக்கதிற்கு Voyants Solutions , Chennai என்ற நிறுவனம் தனது அறிக்கையினை அளித்துள்ளது. அந்த அறிக்கைக்கேற்ப தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 39. நகராட்சி மருந்தகங்கள் பற்றிய விவரம்.

நகராட்சி மருந்தகங்களும் அவற்றில் பணி புரியும் மருத்துவ அதிகாரிகளும் பின் வருமாறு:

உதகமண்டலம் நகராட்சியில் உள்ள முன்று மருந்தகங்களிலும் மூன்று மருத்துவ அலுவலர் பணியிடம் காலியாகவே இருந்து வருகிறது. இது தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. கல் பங்களா மருத்துவமனை | டாக்டர்.கே.கோகுலகிருஷ்ணன் அவர்கள் 01.04.2017 முதல் 31.03.2018 வரை மருத்துவ அலுவலராக பொறுப்பு வகித்துள்ளார். 01.04.2017 முதல் 31.3.2018 வரை மருத்துவ அலுவலர் பணியிடம் காலியாக உள்ளது. |
| 2. காந்தி நகர் மருத்துவமனை | டாக்டர்.கே.கோகுலகிருஷ்ணன் அவர்கள் 01.04.2017 முதல் 31.03.2018 வரை மருத்துவ அலுவலராக பொறுப்பு வகித்துள்ளார். 01.04.2017 முதல் 31.3.2018 வரை மருத்துவ அலுவலர் பணியிடம் காலியாக உள்ளது. |
| 3. ராமகிருஷ்ணாபுரம் மருந்தகம் | டாக்டர்.கே.கோகுலகிருஷ்ணன் அவர்கள் 01.04.2017 முதல் 31.03.2018 வரை மருத்துவ அலுவலராக பொறுப்பு வகித்துள்ளார். 01.04.2017 முதல் 31.3.2018 வரை மருத்துவ அலுவலர் பணியிடம் காலியாக உள்ளது. |

கல் பங்களா மற்றும் இராமகிருஷ்ணாபுரம் மருந்தகங்களிலும் பெண் நோயாளிகளுக்கு சிகிச்சை செய்யும் பெண் உதவி செவிலியர்கள் பணியிடம் காலியாக உள்ளது. இந்நகராட்சி மருந்தகங்களில் அறிக்கையாண்டில் 2 ஆண் மருந்தாளுநர்கள், 2 ஆண் செவிலியர்கள் மற்றும் 1 பெண் செவிலியர் பணி புரிந்து வருகின்றனர்.

இந்நகராட்சி மருந்தகங்களில் 2017–2018–ஆம் ஆண்டில் சிகிச்சை அளிக்கப்பட்ட நோயாளிகள் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| மருந்தகத்தின் பெயர் | **சிகிச்சை பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை** | **நாள் ஒன்றுக்கு சிகிச்சை பெற்றவர்களின் சராசரி எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. ராமகிருஷ்ணாபுரம் | – | – |
| 2.காந்தி நகர் | 6446 | 30–சதவீதம் |
| 3. கல் பங்களா | – | – |
| மொத்தம் | 6446 | 30–சதவீதம் |

மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை 6446 ஆகும். ஒரு நாளைக்கு மருத்துவமனைக்கு வந்தவர்களின் சராசரி எண்ணிக்கை 30 சதவீதம். அறிக்கை ஆண்டில் மருந்தகங்களின் நிர்வாக செலவு ஏதும் மேற்காள்ளப்படவில்லை. சென்ற ஆண்டிலும் மருந்தகங்களின் நிர்வாக செலவு ஏதும் மேற்காள்ளப்படவில்லை

## 40. இடவசதியும் தளவாடமும்.

இராமகிருஷ்ணாபுரம், காந்தி நகர் மற்றும் ஸ்டோன் அவுஸ் ஹில் மருந்தகங்கள் யாவும் நகராட்சி சொந்த கட்டிடங்களில் அமைந்துள்ளது. மருந்தகங்களில் எல்லா வசதிகளும் , போதுமானதாக உள்ளது. மாவட்ட மருத்துவ அலுவலர் மற்றும் ஆணையாளரின் பிரதி நிதியாக நகராட்சி நல அலுவலர் ஆகியோர்களால் இம்மருந்தகங்கள் அவ்வப்போது ஆய்வு செய்யப்பட்டுகின்றன.

## 41. பொது மருத்துவமனைகள்

| | |
|---|---|
| அரசு தலைமை மருத்துவமனை | 1 |
| நகராட்சி மருந்தகங்கள் | 3 |
| நகர்புற ஆரம்ப சுகாதார மையம் | 1 |
| நிர்மலா நர்சிங் ஹோம் | 1 |
| ஜாபார் முகமது சேட் மெமோரியல் மருத்துவமனை | 1 |
| பார்வதி நர்சிங் ஹோம் | 1 |
| ஜெயின் இலவச மருத்துவமனை | 1 |
| விஜயா நர்சிங் ஹோம் | 1 |
| ஐ பவுண்டேசன் கண் மருத்துவமனை | 1 |
| சனிதா நர்சிங் ஹோம் | 1 |
| சரஸ்வதி நர்சிங் ஹோம் | 1 |
| சிவ சக்தி நர்சிங் ஹோம் | 1 |

இவற்றில் அரசு மருத்துவமனைகள் 2–ம், நகராட்சிக்கு சொந்தமானவை 3–ம், தனியாருக்கு சொந்தமானவை 7–ம் ,ஜெயின் இலவச மருத்துவமனை ஒன்றும் உள்ளது.

காந்தி நகர் பகுதியில் பொது மக்கள் நன்மைக்காக நேரு சித்த ஆயுர் வேத மருந்தகம் ஒன்றும் தனியாரால் நடத்தப்பட்டு வருகின்றது.

## பிறப்பு இறப்பு பதிவு விகிதம் விவரம்

அறிக்கையாண்டில் 3674 குழந்தைகளின் பிறப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டு 2803 ஆக இருந்தது. பிறப்பு விகிதங்கள் நடப்பு ஆண்டில் 36.7% கடந்த ஆண்டு 31.70% ஆக இருந்தது.

இந்த அறிக்கையாண்டில் 764 இறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 657 ஆக இருந்தது. இறப்பு விகிதங்கள் நடப்பு ஆண்டில் 7.64% ஆகும். கடந்த ஆண்டு 7.43% ஆக இருந்தது.

## 42. காலரா மற்றும் தொழுநோய்

அறிக்கையாண்டில் இந்நகரில் காலரா மற்றும் தொழுநோயினால் பாதிக்கப்பட்டவர்கள் யாருமில்லை..

### 43. மகப்பேறு மருத்துவமனை மற்றும் மகப்பேறு குழந்தைகள் காப்பகம் 2017–2018

டாக்டர்.கோகுலகிருஷ்ணன் 01.04.2017 முதல் 31.03.2018 வரை மருத்துவ அலுவலராக பொறுப்பு வகித்துள்ளார். 01.04.2017 முதல் 31.03.2018 வரை மருத்துவ அலுவலர் பணியிடம் காலியாக உள்ளது.

இந்நகராட்சியில் ஒரு மகப்பேறு மருத்துவமனையும் 4– மகப்பேறு கவனிப்பு நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. இதில் பணியாற்றும் பணியாளர்கள் விவரம் கீழ்கண்டவாறு

| | |
|---|---|
| ஆண் மருத்துவ அலுவலர் | 0 |
| மகபேறு உதவியாளர்கள் | 3 |
| மகப்பேறு ஆயாக்கள் | 7 |
| பெண் துப்பரவு பணியாளர் | 1 |

| சிகிச்சை விவரம் | நடத்தப்பட்டவை | சிகிச்சை செய்யப்பட்டவை | மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டவை |
|---|---|---|---|
| பேறு கால முன் சிகிச்சை | 52X4 | 912 | 237 |
| பேறு கால பின் சிகிச்சை | 52X4 | 815 | 187 |
| குழந்தைகள் | 52X4 | 815 | 136 |
| மகப்பேறு உதவியாளர்கள் பார்த்த பிரசவம் | – | – | – |

## 44. பேறு கால உதவியாளர்கள்

| பேறுகால சிகிச்சை விவரம் | முதன்முறையாக ஆலோசனை | 2–ம்முறையாக ஆலோசனை |
|---|---|---|
| பேறு கால முன் சிகிச்சை | 912 | 912 |
| பேறு கால பின் சிகிச்சை | 815 | 815 |
| மகப்பேறு உதவியாளர்கள் பார்த்த பிரசவம் | – | – |
| குழந்தைகள் | 815 | 815 |

அறிக்கையாண்டில் 198 பேர் குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் படி சிபாரிசு செய்யப்பட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர். அறிக்கையாண்டில் தாய் சேய் நல விடுதி நிலையங்கள் பராமரிப்பு மற்றும் ஊதியங்கள் வழங்கியவைகளில் ரூ. 90,11,220/– செலவு செய்யப்பட்டது. இது சென்ற ஆண்டில் ரூ. 81,99,059/– ஆக இருந்தது.

## 45. எரு உற்பத்தி

வனத்துறைக்கு சொந்தமான நிலமானதால் குப்பை கொட்டுவதற்கு மட்டுமே பயன் படுத்தப்பட்டு வருகிறது. மேலும் எவ்வித அடிப்படை வசதியும் செய்யாததால் எரு உற்பத்தி செய்ய சாத்தியம் இல்லாத நிலையில் உள்ளது. இந்நிலத்தை நகராட்சிக்குப் பெற உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கென மாற்று நிலத்துடன் ஈட்டு தொகையாக ரூ. 33,38,500/– வனத்துறையினருக்கு செலுத்தப்பட்டும், குத்தகை நீட்டிப்புக்கும் உத்திரவு எதிர்பார்க்கப்படுகிறது.

## 46. அபாயம் மற்றும் அருவருக்கத்தக்க உரிமங்கள்.

1920–ம் ஆண்டு மாவட்ட நகராட்சி சட்டத்தின் 5–வது அனுபந்தத்திலுள்ள எல்லா வியாபாரங்களுக்கும் பிரசுரம் செய்யப்பட்டு, அவைகளுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் துணைச் சட்டங்கள் பின் பற்றி நடக்க அறிவுறுத்தப்பட்டது. கடந்த மூன்று ஆண்டுகளில் கொடுக்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கையும் பெறப்பட்ட கட்டணத் தொகையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. உணவு கலப்பட சட்டத்தின் கீழ் உணவு கலப்பட தொகை வசூலிக்கப்படுவதில்லை.

| ஆண்டு | உரிமம் அளிக்கப்பட்டவை | பெறப்பட்டகட்டணத் தொகை |
|---|---|---|
| 2015–2016 | 3802 | ரூ. 40,58,571/– |
| 2016–2017 | 3802 | ரூ. 41,94,166/– |
| 2017–2018 | 3274 | ரூ. 45,35,900/– |

## 47. மயானங்கள்.

இந்நகராட்சியின் எல்லைக்குள் உள்ள மயானங்கள்.

| | | |
|---|---|---|
| 1 | இந்துக்கள் மயானம் காந்தி நகர் | 1.8 ஏக்கர் |
| 2 | கிருஸ்துவர்கள் பழைய மற்றும் புதிய மயானம் | 13.16 ஏக்கர் |
| 3 | காந்தி நகர் கிராஸ் மயானம் | 5.00 ஏக்கர் |
| 4 | முஸ்லீம்கள் மயானம் பிங்கர் போஸ்ட் | 1.62 ஏக்கர் |
| 5 | செயின்ட் மேரிஸ் ஹில் மயானம் | 16.61 ஏக்கர் |
| 6 | செயின்ட் மேரிஸ்ஹில் சர்ச் மயானம் | 8.10 ஏக்கர் |
| 7 | மினிக்கி சோலை மயானம் | 5.21 ஏக்கர் |
| 8 | முஸ்லீம் சீடர்ஸ் மயானம் | 2.3 ஏக்கர் |
| 9 | மயானம் பழைய உதகை | 1.00 ஏக்கர் |
| 10 | மயானம் லவ்டேல் | 1.73 ஏக்கர் |
| 11 | மயானம் தலையாட்டி மந்து | 1.98 ஏக்கர் |
| 12 | மயானம் கோடப்பமந்து | 7.8 ஏக்கர் |
| 13 | பார்சி மயானம் | 1.8 ஏக்கர் |

## 48. பள்ளி குழந்தைகள் மருத்துவ ஆய்வுத் திட்டம்.

இத் திட்டத்தின் கீழ் பொது சுகாதார இயக்குநர், அவர்களால் அளிக்கப்பட்ட குறியீடு முழுமையாக அடையப்பட்டுள்ளது.

## 49. கண்காட்சிகளும் பண்டிகைகளும்.

ஆண்டு தோறும் உதகை அரசினர் பூங்காவில் மே மாதம் மலர்கண்காட்சி நடை பெறுகிறது. மக்கள் பெருவாரியாக வந்து மலர் கண்காட்சியை கண்டு ரசித்தனர். இதற்காக அறிக்கையாண்டில் நகராட்சியால் சிறந்த முறையில் சுகாதாரமும் மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியும் செய்யப்பட்டன.

## 50. குடும்ப நலத் திட்டம்.

கீழ்கண்ட விவரப்படியாக 2017–2018–ம் ஆண்டில் சாதனை எய்தப் பட்டுள்ளது.

| விவரம் | எஸ்.டி. | ஐயுடி | சிசி | ஒபி |
|---|---|---|---|---|
| குறியீடு | 400 | 250 | 250 | 225 |
| சாதனை | 198 | 159 | 250 | 75 |

## 51. நகரமைப்பு பிரிவு

அறிக்கை ஆண்டில் திரு. எம்.கோபால் முதுநிலை நகரமைப்பு அலுவலராக 01–04–2017 முதல் 20–12–2017 வரையும், திரு.என்.பழனிசாமி நகரமைப்பு ஆய்வாளர்

அவர்கள் நகரமைப்பு அலுவலர் பொறுப்பில் 21–12–2017 முதல் 31–03–2018 வரையும் பணியாற்றினார்கள். நகரமைப்பு பிரிவின் பிரதான பணிகள் கட்டிடம் கட்டஅனுமதி கோரும் விண்ணப்பங்களை பரிசீலித்தல், கட்டிட வரம்பு நிர்ணயித்தல் , அதனை அமுல்படுத்துதல், ஆக்கிரமிப்புகளை கண்காணித்தல். ஆட்சேபணையிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் நில ஆர்ஜித சட்டத்தின் மூலம் (நிலம் எடுத்தல்) அரசு நிலங்களை பாராதீனம் பெறுதல் நகரமைப்பு திட்டம் தயாரித்தல் ஆகும்.

நகரமைப்பு தலைப்பின் கீழ் அறிக்கையாண்டில் செலவு ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. சென்ற ஆண்டிலும் இந்த தலைப்பின் கீழ் செலவு ஏதும் செய்யப்படவில்லை.

உதகமண்டலம் நகராட்சிக்கு 02–04–1990–ம் தேதியிட்ட திட்டம் மற்றும் அபிவிருத்தி துறை ( Planning and Development Department ) அரசாணை எண் 44–ல் மலைப்பகுதி மேம்பாட்டு குழுமம் (Hill Area Conservation Authority ) துவங்கப்பட்டது. உதகமண்டலம் நகராட்சிக்கு வரைவு முழுமை திட்டம் தயார் செய்யப்பட்டது. நகர் ஊரமைப்பு சட்டம் 1972 பிரிவு 24(2) ன் கீழ் 14–05–1993–ம் தேதியிட்ட வீட்டு வசதி மற்றும் நகர் வளர்ச்சி துறையின் அரசாணை எண் 360–ல் வரைவு முழுமைத் திட்டம் இணக்கம் அளிக்கப்பட்டது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை எண் 120–ல் மாவட்ட நகராட்சிகளின் (மலைப்பகுதி) கட்டிட விதிகள் 1993 நிர்ணயிக்கப்பட்டு, கட்டிடக்கலை மற்றும் எழில் நோக்கு காப்பு குழு நிறுவப்பட்டு ( அக்குழுவிற்கு) கட்டிட அனுமதி வழங்க மாநில அளவில் அதிகாரம் வழங்கப்பட்டது. பின்பு அந்த அதிகாரத்தினை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளருக்கு 02–09–1996–ம் தேதியிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 205–ல் அதிகாரம் வழங்கப்பட்டது.

உதகமண்டலம் நகராட்சியில் அரசாணை நிலை எண் 360 நாள் 14–05–1993–ன் படி இணக்கம் அளிக்கப்பட்ட முழுமைத் திட்டம் குறித்த பொது மக்களிடம் பல்வேறு ஆட்சேபணை பெறப்பட்டு, அதன் படி சில மாற்றங்கள் செய்து 29–08–1997–ம் தேதியிட்ட வீட்டு வசதி மற்றும் நகர் புற வளர்ச்சித் துறை அரசாணை எண் 289–ன் படி உதகமண்டலம் முழுமைத் திட்டத்திற்கு அரசின் அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

உரிய சட்ட விதிகளின் படி 250– ச.மீ. குறைவாக உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு நகராட்சி வாயிலாக உள்ளூர் திட்டக் குழுமத்தில் திட்டஅனுமதி பெற்று நிர்வாக அதிகாரியால் கட்டிட அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. 250 ச.மீ. க்கு அதிகமாகவுள்ள குடியிருப்பு கட்டிடங்கள் மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு நீலகிரி மாவட்ட கட்டிடக் கலை மற்றும் எழில்நோக்கு காப்புக் குழுவிற்கு பரிந்துரை செய்யப்பட்டு கட்டிட அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 217 (சி) (1) ன் படி நகர் மன்ற தீர்மானம் 4127 நாள் 27–2–2008 ன் படி இடிமான பொருட்களை அகற்ற விதி எண் 3(5)ல் நிர்ணயிக்கப்பட்ட சேவைக் கட்டணம் ரூ.2000/– வீதமும் ஒவ்வொரு கட்டிட விண்ணப்பத்துடன் வசூலிக்கப்பட்டு வருகிறது. அதன் படி நடப்பு ஆண்டில் கீழ்காணும் விவரப்படி தொகை வரப் பெற்றுள்ளது.

| | |
|---|---|
| கட்டிட உரிமம் கட்டணம் (கணக்கு குறியீட்டு எண்.1019) புதிய கணக்கு குறியீட்டு எண். (1401103) | ரூ.24,22,845/– |
| சேவைக்கட்டணம் (கணக்கு குறியீட்டு எண்.1043) புதிய கணக்கு குறியீட்டு எண். (1401502) | ரூ.1,00,260/– |

அறிக்கையாண்டில் 28 ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன. புதியதாக ஏற்படும் ஆக்கிரமிப்புகள் அவ்வப்போது உடனடியாக அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது.

அறிக்கையாண்டில் வரப்பெற்ற கட்டிட விண்ணப்ப மனுக்கள் பற்றிய விவரங்கள் கீழே கண்டுள்ளவாறு

| | |
|---|---|
| அறிக்கையாண்டில் வரப்பெற்ற கட்டிட விண்ணப்பங்கள் | 311 |
| அறிக்கையாண்டில் உரிமம் வழங்கப்பட்ட கட்டிட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 261 |
| உரிமம் மறுக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை | 21 |
| ஆண்டு இறுதியில் நிலுவையில் உள்ள கட்டிட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 29 |

இந்நகராட்சி பகுதியில் அமைந்துள்ள அனுமதியற்ற கட்டிடங்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ள கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் திரு. யானை ராஜேந்திரன் அவர்களால் தொரப்பட்ட பொது நல வழக்கு W.P.No-32747/07, மற்றும் 32855/07, ன் படி சென்னை உயர்நீதி மன்ற தீர்ப்பு நாள் 31–01–2008 மற்றும் 19–02–2008–ன் படி இந்நகராட்சி பகுதியில் அமைந்துள்ள 1337 அனுமதியற்ற கட்டிடங்களுக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 217 B, 217 J –ன் படி Show Cause Notice, Confirmation Notice-ஆகியவை வழங்க நடப்பு நிதியாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த நடவடிக்கையில் அறிக்கையாண்டில் 8 அனுமதியற்ற மற்றும் விதி மீறல் கட்டிடங்களுக்கு பூட்டி சீல் வைக்கப்பட்டது.

அரசாணை (நிலை) எண் 27 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை (ந.வ.2) நாள் 31–01–2008–ன் படி இந்நகராட்சி உள்ளூர் திட்ட குழும பகுதிக்கு திருத்தி அமைக்கப்பட்ட முழுமை திட்டம் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 26–ன் கீழ் மற்றும் முழுமைத் திட்ட விதி 15–ல் கண்டுள்ள முறைப்படி நிர்ணயிக்கப்பட்ட படிவம் 1–ல் தமிழ்நாடு அரசிதழ் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. மேலும் தினத்தந்தி நாளிதழில் 12–02–2009–லும், தினகரன் நாளிதழில் 16–02–2008–ல் பிரசுரம் செய்யப்பட்டு பொது மக்களிடமிருந்து ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் பெறப்பட்டு 16–02–2009 முதல் 15–04–2009 வரையில் 432 ஆட்சேபணை மற்றும் ஆலோசனைகள் பெறப்பட்டு உள்ளது. மேற்படி ஆலோசனை மனுக்களின் பேரில் ஆய்வு செய்யப்பட்டு குறிப்புகள் தயார் செய்யப்பட்டது. உள்ளூர் திட்டக் குழுமத்தின் ஒப்புதலுடன் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920–பிரிவு 217சி(1)–ன்படி இந்நகர் மன்ற தீர்மான எண் 574 நாள்: 20–02–2014–ன் படி இந்நகராட்சிப் பகுதிக்குள் கட்டிட உரிமம்

வழங்க புதிய உரிமக் கட்டண விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டு கீழ்கண்ட கட்டண விகிதங்கள் அமுல்படுத்தப்பட்டு நடப்பு நிதியாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

1. குடியிருப்பு (1 குடியிருப்பு மட்டும்) தரைதளம் – 1 சதுர மீட்டர் ரூ. 20/–

2. ஒன்றுக்கு மேற்பட்ட குடியிருப்பு முதல் தளம் – 1 சதுர மீட்டர் ரூ. 30/–

3. குடியிருப்பு கலந்த உபயோக கட்டிடம் – 1 சதுர மீட்டர் ரூ.40/–

4.குடியிருப்பு அல்லாத உபயோக கட்டிடம் –1 சதுர மீட்டர் ரூ.50/–

5. ஒவ்வொரு மனை அங்கீகாரம் – ரூ. 300/–

6. அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடநகல் –ரூ. 100/–

7. கூராய்வு கட்டணம் –ரூ. 200/–Toiletக்கு–150/–

RWH(139க்குள்) –ரூ.2000/– கழிவுநீர் தொட்டி–150/–

RWH(250க்குள்) –ரூ.4000/–

மேற்படி கட்டண விகிதங்கள் நகர் மன்றத் தீர்மானத்தின் படி 1–4–2014 முதல் அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

## நகராட்சி நிதி நிலைமை

எல்லா வருமான கணக்கினையும் சேர்த்து மொத்த வருமானம் 43.45 கோடி இதில் செலவினங்கள் 49.18 கோடி ஆகும்.

### 52. சாதாரண நிதி வசதி.

கீழ்கண்ட இனங்களுக்கு அரசு மான்ய தொகை பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 78.11 இலட்சம் |
| 2 | மலைப் பகுதி மேம்பாட்டு திட்டம் | 25.55 இலட்சம் |
| 3 | 14 வது மாநில நிதி ஆணைய மான்யம் | 212.27 இலட்சம் |
| 4 | SBM | 67.82 இலட்சம் |
| 5 | SRP | 36.00 இலட்சம் |
| 6 | SWM | 658.74 இலட்சம் |
| 7 | TURIP | 248.00 இலட்சம் |

### 53. மூலதன செலவீனம்

கீழ்கண்ட தலைப்பின் கீழ் மொத்தம் மூலதன பணிகளுக்கு செலவிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | பொது கணக்கு | 8,38,37,815/– |
| 2 | ஆரம்ப கல்வி கணக்கு | 3,29,58,393/– |
| 3 | குடிநீர் மற்றும் வடிகால் கணக்கு | 1,56,87,550/– |
| 4 | நகரமைப்பு கணக்கு | – |

**54. கடன்கள்.**

நடப்பு ஆண்டின் ஆரம்பத்தில் நிலுவையிருந்த கடன் தொகை ரூ. **16,36,68,811/–** ஆகும். நடப்பு ஆண்டில் வட்டி தொகை ஏதும் செலுத்தப்படவில்லை. கடன்களுக்காக நடப்பாண்டில் செலுத்தப்பட்ட அசல் ரூ.**11,50,329/–** .

**55. முதலீடுகள்.**

ஆண்டு கடைசியில் வட்டி தரும் சேமிப்பு திட்டத்தில் முதலீடு செய்யப்பட்டிருந்த மொத்த தொகை ரூ. **1,28,40,331/–** ஆகும். அதன் விவரம் பின் வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு மின்சார வாரியம் | – |
| 2 | LPA | ரூ. 28,40,331/– |
| 3 | கல்வி நிதி | ரூ. 1,00,00,000/– |
| | **மொத்தம்** | ரூ.1,28,40,331/– |

**56. தணிக்கை.**

2017-2018 ம் ஆண்டிற்கான வருட கணக்கு தணிக்கை செய்யப்பட்டது. அதன் மீதான தணிக்கை முடிவு மிகவும் திருப்திகரமாக இருந்தது. இறுதியில் இருந்த நிலுவை தணிக்கை பத்திகள் **29** ஆகும். நிலுவையிலுள்ள தணிக்கை பத்திகளை நிவர்த்தி செய்ய தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**57. பொது.**

நடப்பு ஆண்டில் பருவ மழைகள் உரிய காலங்களில் பெய்ததினாலும் நீர் நிலைகளில் நீர்வரத்து திருப்திகரமாக இருந்ததினாலும் குடிநீர் தட்டுப்பாடு இன்றி சீராக விநியோகிக்கப்பட்டது. மேலும் நகரின் சுகாதார நிலை திருப்திகரமாக இருந்தது.

நகராட்சி நிர்வாகத்திற்கு சீரிய முறையில் ஒத்துழைப்பு கொடுத்த நீலகிரி மாவட்ட ஆட்சியர், மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட இயக்குநர், நீலகிரி மாவட்டம் ஆகியோர் சிறந்த ஒத்துழைப்பினை நல்கியும், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களில் பணிகளை செய்வதற்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்தும் அவ்வப்போது அறிவுரைகளும் வழங்கி வந்தார்கள்.

நகராட்சி நிர்வாகத்தை செவ்வனே நடத்த தனி அலுவலர், அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களும் முழுமையான ஒத்துழைப்பினை நல்கினார்கள். இதனால் நகராட்சியின் நிர்வாகம் சிறப்பாக இருந்தது.

ஒப்பம்(XXXXX

ஆணையாளர், (பொ)
உதகமண்டலம் நகராட்சி.